# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## மானியக் கோரிக்கை எண். 53

## 2019-2020


**எஸ். பி. வேலுமணி**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி
மற்றும்
சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்



©
தமிழ் நாடு அரசு
2019

# பொருளடக்க அட்டவணை


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–4 |
| 2. | துறையின் முக்கிய செயல்பாடுகள் | 4–8 |
| 3. | கண்காணிப்பு | 8–23 |
| 4. | சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் திட்டங்கள் | 23–41 |
| 5. | முடிவுரை | 41–43 |
| 6. | இணைப்பு | 45–54 |

# சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு 2019-2020

## 1. முன்னுரை:

தமிழ்நாடு அரசு சமுதாயத்தில் அடித்தட்டு மற்றும் விளிம்புநிலையில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்காக எண்ணற்ற புதுமையான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. திட்டங்களைச் செம்மையாக செயல்படுத்தவும், இத்திட்டப் பயன்கள் பயனாளிகளுக்கு சென்றடைகிறதா என்பதை உறுதிப்படுத்தவும், கண்காணிப்பது மிகவும் அவசியமாகிறது.

எனவே, தமிழகத்தில் வாழ்கின்ற அனைத்து தரப்பு மக்களின் வளர்ச்சி மற்றும் சமூக நீதியினை உறுதி செய்வதிலும், நாட்டிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதற்கு ஏற்ற வகையில், தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிட்டுள்ள அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் செயலாக்கப்படுவதை, அனைத்துத் துறைகளுடன்

ஒருங்கிணைந்து கண்காணிக்கும் பணிகளை மேற்கொள்வதற்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் 2011 ஆம் ஆண்டு மே திங்களில், சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை உருவாக்கப்பட்டு சிறப்புடன் செயலாற்றி வருகிறது. திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணிப்பதின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அரசு இத்துறைக்கென தனியாக அமைச்சரை நியமித்துள்ளது.

இத்துறை, மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியும், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தியும் வருகிறது.

அரசின் முதன்மைத் திட்டங்களான ஏழைகளுக்கு கறவைப்பசு வழங்குதல், வறிய நிலையில் உள்ள ஏழை மக்களுக்கு விலையில்லா வெள்ளாடுகள்/ செம்மறி ஆடுகள் வழங்குதல்,

கிராமப்புற வீடில்லா ஏழைகளுக்கு பசுமை வீடுகள் வழங்குதல், திருமண உதவித் தொகையுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு 22 காரட்டில் 8 கிராம் விலையில்லா தங்க நாணயம் வழங்குதல், மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல் மற்றும் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் மூலம் பணிபுரியும் மகளிருக்கு மானியத்துடன் கூடிய இருசக்கர வாகனங்கள் வழங்குதல், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் மற்றும் ஊரக புறக்கடை கோழி வளர்ச்சித் திட்டம் ஆகியவை அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நீடித்த மற்றும் நிலையான வளர்ச்சியை எய்திட வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, எரிசக்தி, கல்வி, மக்கள் நல்வாழ்வு, ஊரக வளர்ச்சி, சமூக நலம் போன்ற தொடர்புடைய முக்கிய துறைகளுடன்

ஒருங்கிணைந்து செயல்பட்டு, திட்டங்களின் செயலாக்கத்தை இத்துறை கண்காணித்து வருகிறது.

## 2. துறையின் முக்கிய செயல்பாடுகள்:

**2.1** சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கிய செயல்பாடுகள் பின்வருமாறு:

- சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசின் "கண்காணிப்பு அமைப்பாக" செயல்படுகிறது.
- பல்வேறு நிகழ்வுகளில் அரசால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் முன்னேற்றத்தினை கண்காணித்தல்.
- அரசின் திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திட தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

- மாவட்டங்களில் நடைபெறும் பணிகள் குறித்து கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், மாவட்ட அளவில் சிறப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்த உரிய மாவட்ட அலுவலர்களுடன் கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்துதல் மற்றும் திட்டச் செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளைக் நீக்கிட உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்தல்.

- செயல்படுத்தப்படும் திட்டங்களின் தரம் மற்றும் அளவு போன்ற அம்சங்கள் குறித்து அரசுக்குத் தேவையான செயற்குறிப்புகள் மற்றும் உரிய தீர்வுகளுக்கான ஆலோசனைகளை வழங்குதல்.

- மாவட்டங்களில் நடைபெறும் வளர்ச்சி பணிகளை மேலாய்வு செய்யும் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வறிக்கைகளின் அடிப்படையில்,

திட்டங்கள் குறித்து கொள்கை அளவில் மாற்றங்கள் தேவைப்படுமாயின் அதன் விவரங்களை முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கு தலைமைச் செயலாளர் மூலம் அறிக்கையாக சமர்ப்பித்தல்.

- முதன்மைத் திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களை சென்று சேர்வதை உறுதி செய்யவும், வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை உயர்த்திடவும் பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து, திட்டங்களின் வழிகாட்டி நெறிமுறைகளில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ளப் பரிந்துரைத்தல்.

- பொருளாதார, சமுதாய மற்றும் தொழில் நுட்பங்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களைக் கருத்திற்கொண்டு, திட்டங்களை மறு சீரமைத்திட பகுப்பாய்வு மேற்கொண்டு திட்ட

நடைமுறைகளை எளிமைப்படுத்துவதன் மூலம் அரசு நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைப்பதற்கான வழி முறைகளை மேற்கொள்ளுதல்.

- அரசுக்குத் தேவையான சிறப்பு அறிக்கைகளைத் தயாரித்து அளித்தல்.

அரசின் முதன்மைத் திட்டங்களை திறம்பட செயல்படுத்திட பிரத்யேகமான கண்காணிப்பு அமைப்பினை தலைமைச் செயலகத்தில் அரசு உருவாக்கியுள்ளது. பல்வேறு துறை சார்ந்த அறிவிப்புகளின் செயலாக்கத்தை இத்துறை கண்காணித்து உறுதி செய்கிறது. முதன்மை திட்டங்களின் செயலாக்கம் குறித்து துறைகளிடமிருந்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு ஒருங்கிணைத்து கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**2.2** பல்வேறு முதன்மைத் திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க பல்வேறு துறைகளின் நிபுணத்துவம் தேவையுறுவதால் இத்துறை அனுபவம் வாய்ந்த பொருளியல் (ம) புள்ளியியல் துறை, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மற்றும் தலைமைச் செயலக அலுவலர்களைப் பணியமர்த்தியுள்ளது.

### 3. கண்காணிப்பு:

திட்டங்களின் பயன்கள் இலக்கு மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வதற்கு முதன்மைத் திட்டங்களை கண்காணித்தல் அவசியமானது. அதன்படி, அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் நிறைவேற்றப்படுவதைச் சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை கண்காணிக்கின்றது.

## 3.1 கண்காணிப்பு முறைகள்:

அரசின் பல்வேறு திட்டங்களின் செயலாக்க நிலை தொடர்பான விவரங்களை துறைகளிடமிருந்து பெற்று தற்போதைய நிலையினை புதுப்பித்து இத்திட்டங்களின் பணிச் செயலாக்கம் மற்றும் நிதிச் செலவினம் ஆகியவற்றின் நிலைகள் குறித்த உரிய விவரங்களை குறித்த கால இடைவெளிகளில் அரசுக்கு இத்துறை அளித்து வருகின்றது.

திட்டங்களின் கண்காணிப்பு, திட்டச் செயலாக்கத்தில் கள அளவில் நிலவி வரும் இடர்ப்பாடுகள் ஏதேனும் இருப்பின், அதனை கண்டறிந்து பின்னூட்டம் அளிக்கின்றது. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்த நிலையினை மதிப்பீடு செய்வதற்கும் தகவல்களை முறையாக சேகரிப்பதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் தொடர் கண்காணிப்பு வழிவகை செய்கின்றது.

அரசின் திட்டங்கள், திட்டமிட்டப்படி செயல்படுத்தப்படுகின்றனவா என்பதையும், திட்ட செயலாக்கத்தில் உள்ள இடர்ப்பாடுகளைக் கண்டறிந்து செயலாக்கத்தினை விரைவுபடுத்திடவும், கண்காணிப்பு வழிவகை செய்கின்றது. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் நிலையினை கண்காணிப்பதுடன், அரசின் முதன்மைத் திட்டங்களின் மீது சிறப்புக் கவனம் செலுத்தி, அவை நடைமுறைபடுத்தப்படுவதையும் கண்காணிக்கின்றது.

## 3.2 உடன்நிகழ் (Online) முறையில் சிறப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்:

மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக அரசு பல்வேறு புதுமையான நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அரசின் திட்டங்களைச் செயல்படுத்தும் சம்பந்தப்பட்ட துறைகள், தமது திட்டங்களின் செயலாக்க நிலை குறித்த தகவலை, உரிய தகவல் தொழில்நுட்பங்களைக் கொண்டு பதிவு செய்திடும் வகையில் தலைமைச் செயலகத்தில் உள்வலைய (Intranet) உடன்நிகழ் (online) அமைப்பினை இத்துறை உருவாக்கி உள்ளது.

## 3.3 செயல் திறன் மிக்க கண்காணிப்பிற்காக ஏற்படுத்தப்பட்ட இயங்கமைவுகள்: (Mechanisms)

செயல்திறன்மிக்க கண்காணிப்பினை உறுதி செய்வதற்கு பின்வரும் இயங்கமைவுகளை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஏற்படுத்தியுள்ளது:-

**(அ) அறிவிப்புகளைக் கண்காணித்தல்:**

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள்,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110—ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாவட்ட ஆட்சியர்களின் மாநாட்டில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், எம்.ஜி.ஆர் நூற்றாண்டு விழா போன்ற நிகழ்ச்சிகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயல்பாட்டினைக் கண்காணிக்கும் பொறுப்பினை இத்துறை மேற்கொள்கிறது.

பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்க நிலை குறித்த முன்னேற்ற விவரங்கள் தொடர்புடைய துறைகளிடமிருந்து இத்துறையால் சேகரிக்கப்படுகின்றன. தலைமைச் செயலாளர் தலைமையில் நடத்தப்படும் அனைத்துச் துறைச் செயலர்களின் மாதாந்திர ஆய்வு கூட்டத்திற்கு

தேவையான விவரங்களை இத்துறை தொகுத்து வழங்குகிறது. முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திற்கும் இத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கை மாதம் இரு முறை சமர்ப்பிக்கப்படுகின்றது. அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்த விவரங்களை சம்பந்தப்பட்ட துறையினர் உடன்நிகழ்வு முறையில் இத்துறைக்கு வழங்கிட ஏதுவாக வலைப்பக்கங்கள் இத்துறையால் ஏற்படுத்தப்பட்டு தலைமைச் செயலக உள்வலையதளத்தில் (Intranet) நிறுவப்பட்டுள்ளது. இந்நோக்கத்திற்காக தனியாக சேவையக கணினி (server) நிறுவப்பட்டுள்ளது. மேலும், பலவிதமான அறிக்கைகளைத் தயாரிப்பதற்கு ஏதுவாக பிரத்யேக உள்உறைவிட (In-house) கண்காணிப்பு மென்பொருள் வடிவமைக்கப்பட்டு இத்துறையால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

செயலகத் துறைகளின்கீழ் இயங்கும் துறைத் தலைவர்களை ஒருங்கிணைப்பதற்கும், அறிவிப்புகளின் தற்போதைய நிலையினை புதுப்பித்திடவும், அரசின் அனைத்துத் துறைகளிலும் தொடர்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பல்வேறு துறைகளிடமிருந்து உடன்நிகழ் (Online) மூலம் பெறப்பட்ட அறிக்கைகள் மற்றும் அறிவிப்புகளின் தற்போதைய நிலைகள் வகைப்படுத்தப்பட்டு, தொகுப்பு அறிக்கை இத்துறையால் தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மாதம் இருமுறை சமர்ப்பிக்கப்படுகின்றது.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் மேற்கொள்ளப்படும் கண்காணிப்புப் பணியானது, திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரித்தல்/ அளவிடுதல்/புதிய திட்டங்களை துவக்குதல்/ நடைமுறையில் உள்ள திட்டங்களில் மாற்றங்களைச்

செய்தல் ஆகியவற்றிற்கு தேவையான மதிப்புமிக்க உள்ளீடுகளை வழங்குகிறது.

**(ஆ) அரசின் முதன்மைத் திட்டங்களைக் கண்காணித்தல்:**

ஏழை மக்களின் வருவாயை உயர்த்துவதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட கறவைப்பசு, வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்குதல், புறக்கடை கோழி வழங்குதல், தகவல் தொழில் நுட்பத்திறன் இடைவெளியைக் குறைப்பதற்காக மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல், ஏழைகளுக்கு நல்ஆரோக்கியம் ஏற்படுத்திட முதல்வரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், கருவுற்ற தாய்மார்களுக்கு பேறுகால நிதி உதவியாக டாக்டர். முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம், ஏழை மற்றும் நலிவடைந்த மகளிருக்கு பல்வேறு திருமண உதவித் திட்டங்களின்கீழ்

நிதியுதவியுடன் கூடிய திருமாங்கல்யத்திற்கு **22** காரட்டில் **8** கிராம் தங்க நாணயம் வழங்குதல், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டுதல், மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்குதல் மற்றும் பணிபுரியும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டம் போன்ற முதன்மைத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்படுகின்றன**.** பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படுகின்ற மேற்கண்ட திட்டங்களின் செயலாக்கத்தை இணைந்து கண்காணிக்கும் பணி சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது**.** இத்திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து பெறப்பட்டு, தொகுக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகள் தலைமைச் செயலாளர் வழியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு

சமர்ப்பிக்கப்படுகின்றது. இவ்வறிக்கைகள் அரசின் ஆய்வுக் கூட்டங்களுக்கு தேவையான அடிப்படை விவரங்களாக பயன்படுத்தப்படுகிறது.

**(இ) மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள்:**

மாவட்ட அளவில் செயல்படுத்தப்படும் முதன்மைத் திட்டங்களின் செயல்பாட்டினைக் கண்காணிப்பதற்கென மாவட்ட வருவாய் அலுவலர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் போன்ற உயர் அலுவலர்கள் மாவட்ட ஆட்சியரால் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இத்தொடர்பு அலுவலர்கள் தொடர்புடைய துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுவதுடன், திட்டங்கள் குறித்த தகவல்களைப் பெற்று, தேவையான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் மாவட்டங்களில் “தொடர்பு அலுவலர்களாக”

செயல்பட்டு வருகின்றனர். இத்துறையின் அலுவலர்கள், களஆய்வு மேற்கொள்ளும்போது மாவட்ட தொடர்பு அலுவலர்கள் ஆய்வுப்பணிக்கு தேவையான விவரங்களை வழங்குகின்றனர்.

**(ஈ) கள ஆய்வுகள்:**

மாவட்ட அளவில் பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் செயல்திறன்கள் குறித்து இத்துறையின் அலுவலர்களால் கள ஆய்வு மேற்கொண்டு அறிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்து உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

## 3.4. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்:

அரசுச் செயலாளர்கள்/ முதன்மைச் செயலாளர்கள்/ கூடுதல் தலைமைச் செயலாளர்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு நியமித்துள்ளது. மாவட்ட

கண்காணிப்பு அலுவலர்கள், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட மாவட்டங்களில் மாதந்தோறும் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தி, பல்வேறு திட்டங்கள் குறிப்பாக, முக்கியத் திட்டங்கள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டு, திட்டங்களை விரைவாக செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், இடையூறுகளுக்கான தீர்வுகளையும், மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர்.

கண்காணிப்பு அலுவலர்கள் பின்வரும் 13 துறைகளின் முக்கிய திட்டங்களை ஆய்வு மேற்கொள்கின்றனர்.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் வேளாண்மை துறையின்கீழ் பயிர் பரப்பாய்வு, நுண்ணீர் பாசனம் உள்ளடக்கிய 6 திட்டங்கள், கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் பால்வளத்துறையில் விலையில்லா கறவைப்பசு/

ஆடுகள், கோழி வளர்ப்பு மேம்பாடு உள்ளடக்கிய **9** திட்டங்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின்கீழ் பொது விநியோகத்திட்டம் உள்ளடக்கிய **4** திட்டங்கள், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் கீழ் ஒருங்கிணைந்த முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டுத் திட்டம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டம் ஆகிய **2** திட்டங்களையும், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் அனைவருக்கும் வீடு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு நில எடுப்பு உள்ளிட்ட **3** திட்டங்களையும் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

மேலும், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள் தகவல் தொழில் நுட்பவியல் துறையின் கீழ் மின்னணு ஆளுமை மாவட்ட திட்டம் (e-Governance), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்கீழ் நகர்ப்புறங்களில் பாதாள சாக்கடைத்

திட்டம், திடப்பொருள் மேலாண்மைத் திட்டம் ஆகிய 2 திட்டங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின்கீழ் புதிய தொழில் பேட்டைகள், சிட்கோவிற்கான நில வங்கி உள்ளடக்கிய 4 திட்டங்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின்கீழ் பட்டா பெயர் மாற்றம், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் உள்ளடக்கிய 7 திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம் உள்ளடக்கிய 4 திட்டங்கள், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் கல்வி உரிமைச் சட்டம், விலையில்லா பாடப்புத்தகம்/ குறிப்பேடு வழங்கல் உள்ளடக்கிய 10 திட்டங்கள், சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின்கீழ் திருமண நிதியுதவி திட்டம் உள்ளடக்கிய 3 திட்டங்கள், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின்

கீழ் மடிக்கணினி வழங்கும் திட்டம் ஆகிய திட்டங்களை ஆய்வு மேற்கொள்கின்றனர். மொத்தத்தில், மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களால் 13 துறைகளின்கீழ் 57 வகையான திட்டங்களுக்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், துறைகளுக்கிடையேயான பிரச்சினைகளைக் களைவதற்கு ஏதுவாக துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதோடு, நடைமுறையில் உள்ள பல்வேறு திட்டங்களின் வழிகாட்டு நெறிமுறைகளின் சிறப்புத் தன்மைகளை மதிப்பிடுதல் மற்றும் அரசளவில் மேற்கொள்ளப்பட வேண்டிய கொள்கை மாற்றங்கள் குறித்தும் பரிந்துரைக்கின்றனர். திட்டங்களில் கவனிக்கப்பட வேண்டிய இனங்கள், முக்கியமான கருத்துக்கள், எடுக்கப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள்,

திட்டத்தின் மேம்பாடு மற்றும் மாற்றங்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகளை கண்காணிப்பு அலுவலர்கள் அரசுக்கு அளிக்கின்றனர். மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, தலைமைச் செயலாளர் வழியாக முதலமைச்சர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

## 4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் திட்டங்கள்:

அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்களைக் கண்காணிப்பதுடன் பின்வரும் இரண்டு முதன்மைத் திட்டங்களை நேரடியாக செயல்படுத்தும் பொறுப்பும் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அம்மா அவர்களால் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறைக்கு, துறை துவக்கப்பட்ட நாளிலேயே அளிக்கப்பட்டது.

1. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்
2. மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்குதல்

மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் **2011–12**ஆம் ஆண்டு முதல் **2015–16**ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் முழுமையாக செயல்படுத்தப்பட்டது.

### 4.1. மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்:

தமிழகம், உயர்கல்வியில் தேசிய மொத்த சேர்க்கை விகிதமான 25.2 சதவீதத்தை விட வியக்கத்தக்க அளவில் இரு மடங்கு சேர்க்கை (46.9 சதவிகிதம்) கொண்ட முன்னேறிய மாநிலமாக விளங்குகிறது. மாநிலத்தின் அனைத்துத்தரப்பு மக்களும் உயர் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்காக உயர் கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கையை கணிசமான அளவில் அதிகரிப்பது தொலை நோக்குத் திட்டம்–2023 ஆவணத்தின் குறிக்கோளாகும்.

மேலும், தமிழகம், மகாராட்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக இந்தியாவின் இரண்டாவது மிகப்பெரிய தொழில்மயமாக்கப்பட்ட மாநிலமாக திகழ்கிறது. கடந்த சில ஆண்டுகளில், தமிழகம் தொழில்மயமானது மட்டுமல்லாமல், பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளது. தேசிய அளவில் தமிழ்நாடு உயர்கல்வியில் **58** பல்கலைக் கழகங்களுடன் இராஜஸ்தான் **(70)** மற்றும் உத்திரப்பிரேதேசம் **(67)** மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ்நாடு, ஏற்கனவே தேசிய மற்றும் பன்னாட்டு தகவல் தொழில்நுட்ப (ஐ.டி) நிறுவனங்களை தொடங்குவதற்கு சாதகமான இடமாக உருவெடுத்து, மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. **1993** ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பத் துறை

குறிப்பிடத்தக்க அளவில் வளர்ச்சியடைந்து நான்கு இலட்சத்துக்கும் மேற்பட்ட தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், சுமார் பத்து இலட்சம் மக்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பினையும் வழங்கியுள்ளது. எனவே, மாணாக்கர்களுக்கு அத்தியாவசிய கல்விக் கருவியாக மடிக்கணினி இருப்பதனால், மடிக்கணினிகளை வழங்குவதன் முக்கியத்துவத்தை தமிழக அரசு உணர்ந்துள்ளது. மேலும், மடிக்கணினி வாங்க இயலாத பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்களும் வெற்றிகரமான மற்றும் பாதுகாப்பான வேலைவாய்ப்பைப் பெற்றிடும் வகையில் வலுவான தகவல் தொழில்நுட்ப அறிவுத்திறன் பெற ஆயத்தப்படுத்திடல் வேண்டும்.

வசதி படைத்தோர் மற்றும் வசதியற்றோர் இடையில் பாகுபாடு இல்லாமல் தகவல் தொழில்நுட்ப அறிவின் இடைவெளியைக் குறைப்பதற்கும் தகவல்

தொழில்நுட்ப திறன்களை வளர்ப்பதற்கும் மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினியை வழங்கும் உன்னதமான திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம், மாநில அரசு அணுகல், பங்கேற்பு மற்றும் அடைதல் ஆகிய மூன்று முக்கிய கல்விக் கொள்கைகளை அடைய வழி வகுத்துள்ளது.

சிறந்த கணினி திறன்களைப் பெறுவதற்கு வசதியாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்துவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். மாண்புமிகு தமிழக ஆளுநர் அவர்கள் **03**.06.**2011** அன்று சட்டமன்றப் பேரவை உரையில் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார், ‘‘இந்த அரசு மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும்

திட்டத்தினை செயல்படுத்தும். மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் செப்டம்பர் 15, 2011 முதல் துவக்கப்பட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பதினொன்றாம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு மற்றும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளின் அனைத்து மாணாக்கர்களுக்கும் படிப்படியாக செயல்படுத்தப்படும்."

தகவல் தொழில்நுட்பத்தின் சமீபத்திய நுட்பங்களை மாணாக்கர்கள், அறிந்து புதுப்பித்து, போட்டி நிறைந்த கணினி சார்ந்த வேலைவாய்ப்புச் சந்தையில் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு வழி அமைப்பதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

2011–12 மற்றும் 2012–13 ஆம் ஆண்டுகளில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கலை

மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் மற்றும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டன. **2013–14** ஆம் ஆண்டிலிருந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பன்னிரெண்டாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் முதலாம் ஆண்டு பயிலும் மாணாக்கர்கள், இத்திட்டத்தின்கீழ் பயன் அடைகின்றனர். முதல் ஆண்டு முதலே ஆசிரியர்கள் வழிகாட்டுதலின்கீழ் மடிக்கணினியைப் பயன்படுத்தி போட்டித் தேர்வுகளுக்கு தயாராவதற்கு ஏதுவாக, **2018–19** ஆம் ஆண்டு முதற்கொண்டு, பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பதிலாக பதினொன்றாம் வகுப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது.

## ஆண்டுவாரியாக / கல்வி நிறுவனங்கள் வாரியாக மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்குதல்

| ஆண்டு | பள்ளிகள் | கலை/ அறிவியல் கல்லூரிகள் | பொறியியல் கல்லூரிகள் | பல்தொழில் நுட்பக் கல்லூரிகள் |
|---|---|---|---|---|
| 2011–12 | 12–ஆம் வகுப்பு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2012–13 | 12–ஆம் வகுப்பு | மூன்றாம் ஆண்டு | இரண்டாம் மற்றும் நான்காம் ஆண்டு | முதல் மற்றும் மூன்றாம் ஆண்டு |
| 2013–14 முதல் 2017–18 வரை | 12–ஆம் வகுப்பு | – | – | முதலாம் ஆண்டு |
| 2018–19 | 11–ஆம் வகுப்பு (ம) 12 ஆம் வகுப்பு | – | – | முதலாம் ஆண்டு |
| 2019–20 ஆண்டு முதல் | 11–ஆம் வகுப்பு | – | – | முதலாம் ஆண்டு |

இத்திட்டமானது சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படுகிறது மற்றும் மடிக்கணினிகளை கொள்முதல் செய்கின்ற பணி

தமிழ்நாடு மின்னணுக் கழகத்திற்கு (எல்காட்) ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாணவ சமுதாயத்தின் பயன்பாட்டினைக் கருத்தில் கொண்டு மடிக்கணினிகளுக்கான விவரக் குறிப்பீடுகளை தமிழ்நாடு மின்னணு கழகம் (எல்காட்) இறுதி செய்கிறது. தமிழ்நாடு வெளிப்படைத் தன்மை ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 விதிகள் 2000–இன்படி போட்டி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வெளிப்படையான முறையில் தமிழ்நாடு மின்னணு கழகத்தால் மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்கீழ் மடிக்கணினிகளை கொள்முதல் செய்வதற்கான நிர்வாக ஒப்புதல் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் வழங்கப்படுகிறது. இதற்குத் தேவையான நிதி தமிழ்நாடு மின்னணு கழகத்திற்கு சிறப்புத் திட்டச்

செயலாக்கத் துறையின் மாநில திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வழங்கப்படுகிறது.

பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி இயக்ககங்கள் மூலமாக **2011–12** மற்றும் **2012–13** ஆகிய ஆண்டுகளிலும் **2013–14** ஆம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்ககம் மூலம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற மடிக்கணினிகள் "Windows 10 pro" தேசிய கல்வி பதிப்பு மற்றும் மேம்பட்ட கணினி பயன்பாடு வளர்ச்சி மையத்தின் BOSS / LINUX ஆகிய இரட்டை தொடக்க வசதி உடையதாகும். ஆங்கிலம் மற்றும் தமிழ் எழுத்துக்களுடன் நாணயக் குறியீட்டுடன் கூடிய தரமான விசைப் பலகையும் ஒருங்கிணைந்த தொடு தளம் (Touch Pad) வழங்கப்படுகிறது. வைரஸ் எதிர்ப்பு மென்பொருளுடனும், தமிழ்

இணையக் கழகத்திலிருந்து பெறப்பட்ட விசைப்பலகை இடைமுகப்புடன் கூடிய தமிழ் எழுத்துரு மற்றும் கல்வித்துறையிலிருந்து பெறப்பட்ட பாடக்கல்வி உள்ளடக்கங்கள் வழங்கப்படுகின்றன. பார்வைத் திறன் அற்ற மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் மடிக்கணினிகளில் அவர்கள் பயன்படுத்தும் வகையில் சிறப்பு மென்பொருள் நிறுவப்பட்டுள்ளது. மின் வடம், மின் ஏற்றி மற்றும் பயனர் கையேடு ஆகியவையும் வழங்கப்படுகின்றன. மடிக்கணினியின் பாதுகாப்பிற்காக முதுகு பையும் (Back Pack) வழங்கப்படுகிறது. மடிக்கணினி வழங்கும் திட்டம், வாயிலாக, பரவுத்தாள் (Spread Sheet), விளக்கக் காட்சி (Power Point Presentation) மற்றும் சொற்செயலி (Word Processing) ஆகிய தொழில்நுட்ப அறிவுத் திறன்களை, மாணாக்கர்கள் பெறவும், ஆர்வமுடன் கற்கவும் வழிகோலுகிறது.

மின்கலன் உட்பட மடிக்கணினிகளுக்கு ஓராண்டு பொறுப்புறுதி வழங்கப்பட்டுள்ளது. மடிக்கணினிகள் நன்கு செயல்படுவதையும் பராமரிப்பினையும் உறுதி செய்திட, அனைத்து மாவட்டங்களிலும் மடிக்கணினி வழங்கும் நிறுவனங்களால் சேவை மையங்கள் அமைக்கப்பட்டு, அவ்வசதி குறித்த தகவல்கள் மாணாக்கர்களுக்கு நன்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயனடைந்த மாணவர்கள் கணினியின் பலவித பயன்களை கண்டுணர்ந்து பயன்படுத்த முடிகிறது. மாணவர்கள் மின்னணு இதழ், மின்னணு சஞ்சிகைகள், காணொளிப் பயிற்சி ஆகியவற்றை அணுகுவதற்கும் பயன் படுத்துவதற்கும் இத்திட்டம் உதவிகரமாக உள்ளது. மேலும் மாணாக்கர்கள் சமூக ஊடகங்களை பயன்படுத்தியும் உலகளாவிய நூலகங்களை அணுகியும், தங்கள் திறமைகளை வளர்த்துக்

கொள்வதற்கும், தகவல் தொழில்நுட்பத் தரத்தினை நெகிழ்வுத் தன்மையுடன் உயர்த்திக் கொள்வதற்கும் மிகப்பெரிய வாய்ப்பாக அமைந்துள்ளது.

மாணாக்கர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம் பெரு வெற்றியுடன் செயல்படுத்தப்படுகிறது. குடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்கள், குறிப்பாக உடன்பிறந்தோர் கணினி குறித்த தொழில்நுட்பத்தை அறிந்து கொள்வதற்கும், இயக்குவதற்கும் மிகுந்த ஈடுபாடு காட்டுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த வளர்ச்சியானது எதிர்காலத் தலைமுறையினர் கணினி தொழில்நுட்ப கல்வியறிவிற்கு தங்களைத் தயார்படுத்திக் கொள்ளவும், கணினி தொழில்நுட்ப உலகின் அபரிமிதமான வாய்ப்புகள் வாயிலாக சிறந்து விளங்கவும் வழிவகை செய்கிறது. குடும்பத்தின் இளம் தலைமுறையினர் இதன்மீது கொண்டுள்ள ஆர்வம், சமூகத்தில் நிகழவிருக்கும் ஒரு மாற்றத்தின்

அறிகுறியினை இத்திட்டம் வெளிக் கொணர்கிறது. மொத்தத்தில், மாணாக்கர்கள் மடிக்கணினியை ஒரு கருவியாக மட்டும் பார்க்காமல், ஏற்றமிகு எதிர் காலத்திற்கான சாளரமாகவும், சமூக நிலையை மேம்படுத்துவதற்கான ஏணியாகவும் கருதுகின்றனர்.

இந்த திட்டம், மாணாக்கர்களின் திறன் மதிப்பை கூடுதலாக்கி, அவர்களின் படைப்புத் திறனை உயர்த்திடும் தூண்டுகோலாய்த் திகழ்கிறது. காலப்போக்கில் இத்திட்டத்தின் மூலம் ஏற்படும் மாற்றமானது, மாணவ சமுதாயத்தின் நிறைவான வெற்றியின் அடையாளமாகத் திகழும்.

தேசிய அளவில், மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கும் திட்டத்தை 2011–12 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்ற ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

இத்திட்டத்தின்கீழ் **2011–12** ஆம் ஆண்டு முதல் **2016–17** ஆம் ஆண்டு வரை ரூ.**5490.75** கோடி மதிப்பில் **37.30** இலட்சம் மடிக்கணினிகள் விலையேதுமின்றி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**2017–18, 2018–19** மற்றும் **2019–20** ஆம் ஆண்டுகளில் பயின்ற/பயிலும் மாணாக்கர்களுக்கு உத்தேசமாக **15.53** இலட்சம் மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிதியாண்டில் ரூ.**1362.27** கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 4.2 மகளிருக்கு விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம்

சிறப்புத் திட்டச் செயலாக்கத்துறை மூலம் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் இத்துறையால் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் நோக்கமானது, மகளிருக்கு சிரமமான அன்றாட

வீட்டுவேலைகளை எளிதாக்கிட உரிய சாதனங்கள் அளிப்பதாகும். 1.75 கோடி குடும்பங்களில் உள்ள மகளிருக்கு இச்சாதனங்கள் ரூ.7,686.21 கோடியில் 2011–12 ஆம் ஆண்டு முதல் 2015–16 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளன.

## 4.3 நிறுவன வளத் திட்டமிடல் (Enterprise Resource Planning - ERP)

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் செயல்படுத்தப்படும் “மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கும் திட்டத்தின்” கீழ், மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு சென்றடைவதைக் கண்காணிக்க, ‘நிறுவன வளத் திட்டமிடல்’ என்ற உயரிய மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மேலாண்மை மென்பொருள், நிறுவனத்தின் அனைத்து பணிகளையும் ஒருங்கே நிர்வகிக்க உதவுகின்றது. இந்த நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள்,

பொருட்கள் வாங்குதல், வழங்குதல் மற்றும் விநியோகித்தல் போன்ற அனைத்து அம்சங்களையும் ஒருங்கே உள்ளடக்கிய ஒன்றாகும். இம்மென்பொருள் மடிக்கணினிகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் வழங்குநர்களிடமிருந்து வாங்குவது முதற்கொண்டு மாணாக்கர்களுக்கு வழங்குதல் வரையிலான பின்வரும் பணிகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

- ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை விவரங்களை பதிவு செய்தல்
- மடிக்கணினி வழங்குநரின் விவரங்களை பதிவு செய்தல்
- மடிக்கணினிகளை வழங்குநர்களுக்கு ஒதுக்கீடு செய்தல்
- வழங்கப்பட்ட மடிக்கணினிகளை மூன்றாம் நபர் ஆய்வு செய்த விவரங்களை பதிவிடுதல்
- கல்வி நிறுவனங்களின் விவரங்களை பதிவு செய்தல்

- கல்வி தகவல் மேலாண்மை எண்ணின் (EMIS) அடிப்படையில் மாணாக்கர்களின் மடிக்கணினி தேவை விவரங்களை பதிவு செய்தல்
- மாணாக்கர்களின் தேவைப்பட்டியலை உருவாக்குதல்
- வழங்குநர்களுக்கான கல்வி நிறுவனங்களை ஒதுக்கீடு செய்தல்
- வழங்குதல் மற்றும் விநியோகம்
- கல்வி நிறுவனங்களில் களஆய்வு
- பயனாளிகளின் விவரங்களை பதிவிடுதல்
- மாணாக்கர்களின் பெயர் விவரங்களோடு அவர்களுக்கு வழங்கப்பட்ட மடிக்கணினி விவரங்களை இணைத்தல்
- மடிக்கணினி வழங்குநர்களுக்கு பணத் தீர்வு செய்த விவரங்களை பதிவிடுதல்
- வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள மடிக் கணினிகளை மாவட்ட தலைமையகத்தில் ஒப்படைக்கும் விவரங்களை பதிவு செய்தல்
- மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகளை மறுஒதுக்கீடு செய்தல்
- அறிக்கைகள் உருவாக்கம்

இந்நிறுவன வளத் திட்டமிடல் மென்பொருள், விலையில்லா மடிக்கணினிகள் மாணாக்கர்களுக்கு வழங்குவதை கண்காணிக்க பெரிதும் உதவுகிறது.

**5. முடிவுரை:**

தமிழகம், பல்வேறு கொள்கை முனைப்புகள் மற்றும் புதுமையான திட்டங்கள் மூலம் ஏழை மக்களின் சமூக பொருளாதார நிலையினை மாற்றி மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. கருவுற்ற தாய்மார்கள் ஆரோக்கியமான மகவை பெற்றிடுவதை உறுதி செய்தல், மாணாக்கர்கள் திறன் மற்றும் வேலைவாய்ப்பினை அதிகப்படுத்துதல், ஏழை எளியோருக்கான வாழ்வாதாரங்களை மேம்படுத்தி அவர்களின் வருமானத்தை உயர்த்துதல், ஊரக ஏழை எளிய மக்களுக்கு சுற்றுச்சூழலுக்குத் தகுந்த பசுமை வீடுகள் வழங்குதல், பெருந்தன்மையுடன் சமுதாயத்தில் கைம்பெண்கள் மற்றும்

நலிவடைந்தோருக்கு உதவுதல், தேவையுள்ள அனைவருக்கும் மருத்துவக் காப்பீடு வழங்குதல் மற்றும் பணிபுரியும் மகளிருக்கு மானியத்துடன் கூடிய இருசக்கர வாகனங்கள் வழங்குதல் போன்ற நலத்திட்டங்களின் மூலம் நற்பயன்களை தமிழக மக்கள் துய்த்து வருகின்றனர்.

அரசின் பல்வேறு முதன்மைத் திட்டங்கள் மற்றும் அறிவிப்புகளின் செயலாக்கத்தைக் கண்காணிப்பதற்காக சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை எளிய மற்றும் பயன்படுத்த வசதியான உள்வலையதள மென்பொருளினை வடிவமைத்து உருவாக்கி, தலைமைச் செயலக உள்வலையதளத்துடன் இணைத்துள்ளது. இந்த மென்பொருளின் மூலம் அரசுத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுவதை இத்துறை திறன்பட கண்காணிக்கிறது.

தமிழக அரசு பல்வேறு தரப்பு மக்களின் நன்மைக்காகவும், செழிப்பான வாழ்விற்காகவும் அறிவித்த புதுமையான முதன்மைத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்திட சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மேற்கொண்டு வரும் தொடர் கண்காணிப்பு, தமிழக மாநிலத்தின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிக்கின்றது.

**எஸ். பி. வேலுமணி**
**நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி**
**மற்றும்**
**சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர்**







தேனி மாவட்டம்
பள்ளிக் கல்வித்துறை











கண்காணிப்பு செயல்முறை – விளக்கப்படம்
திட்டம்
விவரங்கள் சேகரித்தல்
விவரங்கள் செயலாக்கம் மற்றும் தொகுத்தல்
விவரங்களை பகுப்பாய்தல்
அறிக்கைகள் தயாரித்தல்
கள ஆய்வுகள்
உயர் மட்ட கண்காணிப்புக் குழு
பரிந்துரைகள்
கொள்கை இடையீடு
மேம்படுத்துதல் / மாற்றங்கள்


மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்
மடிக்கணினி பெற்று பயனடைந்த மாணாக்கர்களின் எண்ணிக்கை
(2011-12 முதல் 2016-17 வரை)– 37.30 இலட்சம்
பல் தொழில் நுட்ப கல்லூரிகள் 1.37 இலட்சம் (3.69%)
கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 4.21 இலட்சம் (11.29 %)
பொறியியல் கல்லூரிகள் 0.47 இலட்சம் (1.25%)
பள்ளிகள் 31.25 இலட்சம் (83.78 %)


மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்குதல்
(2011–12 முதல் 2016–17 வரை) எண்ணிக்கை – 37.30 இலட்சம்
3,00,000
2,50,000
2,00,000
1,50,000
1,00,000
50,000
0
31,639
36,912
40,898
43,119
69,285
70,017
73,701
75,421
76,452
87,638
90,825
94,043
95,434
96,306
95,992
96,511
1,16,679
1,23,964
1,29,599
1,29,624
1,33,668
1,38,244
1,43,855
1,49,759
1,59,583
1,66,195
1,66,898
1,68,749
1,79,741
1,83,444
2,26,016
2,39,625
மாவட்டங்கள்